க.பொ.த (உ/த)ப் பரீட்சை - 2013
கணக்கீடு I
நேரம் : 2 மணித்தியாலம்

01 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. பின்வரும் கூற்றுகளில் சரியானது / சரியானவை
   A. கணக்கீடு என்பது தகவல்களைச் சேகரித்து வழங்குவதற்கான பல்வேறு தொழிற்பாடுகளையும் உள்ளடக்குவதாகும்.
   B. கணக்கீட்டுத் தொழிற்பாடுகள் நிறுவனங்களின் அகபுறசூழல் காரணிகளினால் தாக்கங்களுக்கு உள்ளாகும்.
   C. கணக்கீடு வளக்கட்டுப்பாட்டு முறைகளுள் ஒன்றாகும்.
   D. வணிகமொன்றில் உரிமையாளர் எடுப்பனவு நிறுவன செயற்பாட்டிற்கு புறம்பான நடவடிக்கையாகும்.
   E. கணக்கீட்டு நிறுவன அமைப்புகள் கணக்கீட்டுத் தொழிற்பாடுகளினை நவீன மயப்படுத்துகின்றன.

   1. A, C, D, E சரியானவை
   2. A, B, C, D சரியானவை
   3. B, C, D, E சரியானவை
   4. A, C, D சரியானவை
   5. A, B, C, D, E ஆகியன

02. ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்றில் 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுகளைத் தயாரித்தது. இவற்றுள் நிதிக்கூற்றுகளாக கருதப்பட முடியாதது.
   1. 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையற்றகூற்று
   2. 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான முன்வரைபு வருமானக்கூற்று
   3. 2011 மார்ச் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை
   4. 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று
   5. 2011 மார்ச் 31 இல் முடிவடையும் வருடத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

03ம் 04ம் வினாக்களுள் விடை காண்பதற்கு கீழ் உள்ள தகவல்களைப் பயன்படுத்துக.

பண்ட வணிக நிறுவனத்தின் 2011.03.01ல் இருந்தபடி சொத்துக்கள் ரூபா 150000 பொறுப்புகள் ரூபா 60,000 ஆகவும் காணப்பட்டன. மார்ச் மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு
   1. வங்கிக்கடன் தவணைப் பணக்கொடுப்பனவு ரூபா 8800 உரிமையாளர் தனது சொந்த நிதியில் இருந்து செலுத்தியிருந்தார். இக்கொடுப்பனவில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாத வங்கிக்கடன் வட்டி ரூபா 1800 உள்ளடங்கும்.
   2. வங்கியில் வைப்புச் செய்து கடன்பட்டோர் காசோலை ரூ. 12,000 வங்கியால் மறுக்கப்பட்டவை காசேட்டில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.
   3. சொந்த உபயோகத்திற்கென ரூபா 6,000 பெறுமதியான இருப்புக்களை உரிமையாளர் எடுத்திருந்தார்.
   4. ரூபா 20,000 கிரயமான இருப்புக்கள் ரூபா 32,000 இற்கு கடனுக்கு விற்கப்பட்டன.

03. மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் 2011 மார்ச் 31இல் தேறிய சொத்தின் பெறுமதி?
   1. ரூபா 104200
   2. ரூபா 104800
   3. ரூபா 14200
   4. ரூபா 103000
   5. ரூபா 13000

04. மேற்படி கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் தொழிற்படு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றம் யாது?
   1. ரூபா 6,000 அதிகரிப்பு
   2. ரூபா 7200 அதிகரிப்பு
   3. ரூபா 4800 அதிகரிப்பு
   4. ரூபா 4200 அதிகரிப்பு
   5. ரூபா 4800 குறைவு

05. நிறுவனமொன்றில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில பொதுப்பேரேட்டுக் கணக்குகளில் பதிவு செய்யப்பட்ட முறைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

கொடுக்கல் வாங்கல்	விபரம்	வரவுவைத்த கணக்கு	செலவு கணக்கு
A	கடன்கொடுத்தோரால் விதித்ததண்டவட்டி	கடன்கொடுத்தோர்	வட்டிவருமானம்
B	பதிவழித்த நட்டகடன் தொர்பான மீளகாசு பெறுதல்	காசு	கடன்பட்டோர்
C	கணக்குகளில் பதியப்பட்டிருந்த தொலைபேசி பட்டியலுக்கான காசுக்கொடுப்பனவு	தொலைபேசி	காசு
D	உட்திரும்பல் கணக்கின் மூடும்பதிவு	விற்பனை	உட்திரும்பல்

மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களில் இரட்டைப்பதிவு முறைக்கமைய சரியாகப் பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

1. A, C, D
2. B, C
3. B மட்டும்
4. D மட்டும்
5. B, C, D

06. ஜனகன் வியாபாரத்தின் 2011.03.31 ஆம் திகதியில் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் வரவு செலவு நிரல்களின் கூட்டுத்தொகை சமப்படவில்லை. பின்னர் பின்வரும் காரணங்கள் கண்டறியப்பட்டன.
அலுவலக உபகரணக் கொள்வனவு ரூ. 8400 கொள்வனவு கணக்கில் ரூ. 4800 என பதியப்பட்டிருந்தது.
வங்கிக் கட்டணம் ரூ. 600 காசேட்டில் மாத்திரம் பதியப்பட்டிருந்தது.
வரவுத்தாள் ஒன்றின் பெறுமானம் ரூ. 2400 முதன்மையேட்டில் ரூ. 4200 என பதியப்பட்டிருந்தது.
மேற்கூறிய காரணங்களினால் இப்பரீட்சை மீதியில்
1. வரவு பக்க கூட்டுத்தொகை ரூபா 2400 குறைவாகும்.
2. செலவுபக்க கூட்டுத் தொகை ரூபா 2400 குறைவாகும்.
3. வரவு பக்க கூட்டுத்தொகை ரூபா 4200 குறைவாகும்.
4. செலவு பக்க கூட்டுத்தொகை ரூபா 4200 குறைவாகும்.
5. வரவு பக்க கூட்டுத்தொகை ரூபா 600 குறைவாகும்.

07. சித்தார் வியாபாரத்தின் 2010 டிசம்பர் மாதத்திற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.
டிசம்பர் மாதம் மாற்றப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 18600
டிசம்பர் மாதம் வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 22000
டிசம்பர் 31ல் வங்கிக் கூற்றின் படி வங்கி வரவுமீதி ரூபா 7000
நிலையான வைப்புத் தொகையான ரூபா 10,000 வங்கி தவறாக சித்தர் நடைமுறைக்கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தன.
காசேட்டில் சீராக்கப்படாத பங்கு இலாபம் ரூபா 8500 காசோலைப்புத்தக கட்டணம் ரூபா 500
ஐந்தொகையில் (2010 டிசம்பர் 31ல்) காட்டப்பட வேண்டிய காசேட்டு வங்கி மீதி
1. ரூபா 13600 மேலதிகப்பற்று
2. ரூபா 5600 மேலதிகபற்று
3. ரூபா 6400 வரவு மீதி
4. ரூபா 3600 மேலதிகபற்று
5. ரூபா 21600 மேலதிகபற்று

08. ரோசன், சமன் இலாபநட்டத்தை 2:1 விகிதத்தில் பங்கு கொள்ளும் பங்காளிகளாவார்கள் 2010 டிசம்பர் 31 இல் அவர்களின் நிலையான மூலதனம் மீது வருடாந்தம் 10% மூலதன வட்டி நடைமுறைக் கணக்கில் செலவு வைத்துள்ளனர். சமனுக்கான வருடாந்த சம்பளம் ரூபா 33,000 நடைமுறைக்கணக்கில் செலவு வைக்கப்பட்டு இருந்தது. மூலதன மீதியும் நடைமுறை மீதியும் முறையே வருமாறு.

		ரோசன்	சமன்
2010.01.01 இல் மூலதனக் கணக்கு மீதி	ரூபா	120,000	150,000
2010.01.01 இல் நடைமுறைக்கணக்கு மீதி	ரூபா	18,000	12,000
2010.12.31 இல் நடைமுறைக்கணக்கு மீதி	ரூபா	25,000	55,000
பங்காளர் பற்றுகள்	ரூபா	15,000	10,000

ஆண்டுக் காலத்தில் சமன் சம்பளம் ரூபா 12,000 எடுத்த தொகை வருமானக் கூற்றில் செலவாக கணக்கெடுக்கப்பட்டமை நடைமுறைக்கணக்கு மீதி எடுக்கப்பட்ட பின்னர் தெரிய வந்துள்ளது. இத்தவறை திருத்திய பின்னர் பங்குடமை வியாபாரத்தில் உழைக்கப்பட்ட இலாபமும் 2010.12.31 இல் சமனின் நடைமுறைக்கணக்கு மீதியும் முறையே.
1. ரூபா 75,000, ரூபா 43,000
2. ரூபா 87,000, ரூபா 43,000
3. ரூபா 87,000, ரூபா 47,000
4. ரூபா 75,000, ரூபா 47,000
5. ரூபா 63,000, ரூபா 48,000

09. வரையறுத்த XL கம்பனியின் 2012.04.01 இல் கூறப்பட்ட சாதாரணபங்கு மூலதனமாக 15,000 பங்குகள் ரூபா 360,000 காணப்பட்டன. 2013.03.31 இல் முடிவடைந்த நிதி ஆண்டில் 10,000 புதிய பங்குகள் பங்கு ரூபா 30 விலையில் வழங்கி பணம் பெறப்பட்டது. பங்கு வழங்கற் செலவு ரூபா 30,000 செலுத்தப்பட்டது.
2013.04.01 இல் கூறப்பட்ட மூலதனப்பெறுமதியும் பங்கு ஒன்றின் சராசரி பெறுமதியும் முறையே.

1. ரூபா 660000, ரூபா 26.40
2. ரூபா 660000, ரூபா 26.40
3. ரூபா 672000, ரூபா 26.88
4. ரூபா 670000, ரூபா 26.80
5. ரூபா 630000, ரூபா 25.40

10. பின்வரும் கூற்றுகள் மாணவர் ஒருவரால் கூறப்பட்டவை.

A. உரிமையாளர் மேலதிக மூலதனமின்றி வளங்களில் உட்பாய்ச்சலையும் உரிமையான்மையில் அதிகரிப்பினையும் ஏற்படுத்தல் வருமானம் எனப்படும்.

B. உரிமையாளரின் பற்றுதல் இன்றி தேறிய சொத்தில் ஏற்படும் குறைவு செலவு எனப்படும்.

C. கொடுப்பனவின் போது வளங்களில் ஒரு வெளிப்பாய்சலினை ஏற்படுத்தும் கடந்தகால கொடுக்கல் வாங்கல் நிகழ்வு பொறுப்பாகும்.

D. கடந்தகால சம்பவமொன்றினால் தோன்றிய வணிகத்தினால் கட்டுப்படுத்தக் கூடிய வணிகத்தில் உட்பாய்கின்ற பொருளாதார நன்மை சொத்துக்கள் எனலாம்.

அம்மாணவர் கூறிய கூற்றுகளில் சரியானது / சரியானவை.

1. A, C, D சரியானவை
2. A, C சரியானவை
3. A D சரியானவை
4. B, C, D சரியானவை
5. A, B, C, D சரியானவை

11. பின்வரும் எண்ணக்கருக்கள் தொடர்பாக கூறப்பட்ட கூற்றுகளில் சரியானது / சரியானவை.

A. தேற்றல் எண்ணக்கருவின் படி சேவை ஒன்று வழங்கப்பட்டதுமே அவை சேவை வருமானமாக காட்ட முடியும்.

B. நிதிக்கூற்றுகளை தயாரிக்கும் பொழுது பின்பற்றப்பட வேண்டிய அடிப்படை / அடிப்படைகள் பொருண்மை / அட்டுறுத்தல் ஆகும்.

C. பாதுகாப்பு எண்ணக்கருவிற்கமைய கடன்கொடுத்தோர் கழிவு ஏற்பாடு பேணப்பட்டு இருத்தல்

D. தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவிற் கமைவாக இருப்புகள் நடைமுறைச் சொத்து ஒன்றாக வெளிப்படுத்துவது.

1. A, D சரியானவை
2. A, B, C சரியானவை
3. A, B, D சரியானவை
4. B, C, D சரியானவை
5. A, B, C, D சரியானவை

- **12ம் 13ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழ் உள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

நிறுவனமொன்றில் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன. 2011.03.31 இல் முடிவடைந்த ஆண்டில்

விற்பனைக்கிரயம்	ரூபா	168,000
இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு	ரூபா	7,000

விற்பனை விலையில் 20% இலாபம் உழைக்கப்படுகின்றது.

		2010.04.01		2011.03.31
கடன்கொடுத்தோர் மீதி	ரூபா	19,000	ரூபா	23,000
இருப்புகள்	ரூபா	24.500		?

12. 2011.03.31 இல் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும் விற்பனைப் பெறுமதியும் கொள்வனவு பெறுமதியும் முறையே

1. ரூபா 210,000 ரூபா 161,000
2. ரூபா 210,000 ரூபா 175,000
3. ரூபா 201,250 ரூபா 176,000
4. ரூபா 201,600 ரூபா 161,600
5. ரூபா 201,600 ரூபா 161,750

13. 2011.03.31 இல் கடன்கொடுத்தோருக்கு ஆன கொடுப்பனவு தொகை.

1. ரூபா 157,000
2. ரூபா 172,000
3. ரூபா 171,000
4. ரூபா 157,600
5. ரூபா 157,750

14. விளையாட்டுக் கழகம் ஒன்றின் கணக்காண்டு டிசம்பர் 31 இல் முடிவடைகின்றது. இக்கழகத்தில் வருடாந்தம் உறுப்பினர் ஒருவர் ரூபா 200 சந்தாக்கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும். 100 அங்கத்தவர்கள் உறுப்பினர்களாக இருந்தனர். பெறப்பட்ட விபரம் வருமாறு.
1. 2010 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட சந்தா வருமாறு.

2009 ம் ஆண்டு நிலுவை தொடர்பாக	ரூபா	1,600
2010 ம் ஆண்டு தொடர்பாக	ரூபா	16,000
2011 ம் ஆண்டு தொடர்பாக	ரூபா	1,200
2012 ம் ஆண்டு தொடர்பாக	ரூபா	800

2. 2009ம் ஆண்டில் 2010ம், 2011ம் ஆண்டிற்குரிய சந்தாவை 4 உறுப்பினர்கள் செலுத்தி இருந்தனர். 2010 டிசம்பர் 31 இல் ஐந்தொகையில் வெளிப்படுத்தப்படும் நிலுவைச் சந்தா மீதியும் முற்பண சந்தா தொகையும் முறையே.
1. ரூபா 3,200 ரூபா 2,800 2. ரூபா 2,400 ரூபா 2,000
3. ரூபா 4,000 ரூபா 3,600 4. ரூபா 1,600 ரூபா 800
5. ரூபா 2,400 ரூபா 2,600

15. உற்பத்தி பொருளொன்று தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

உற்பத்தி கிரயம்	ரூபா	140,000	ஆரம்ப மூலப்பொருள் இருப்பு	ரூபா 18,000
நேர்கூலி	ரூபா	42,000	நேர்ச்செலவு	ரூபா 6,000
இறுதி மூலப்பொருள் இருப்பு	ரூபா	20,000	பழுதடைந்த மூலப்பொருள்	ரூபா3,000
குறைவேலை இருப்பில் அதிகரிப்பு ரூபா		4,000		

உற்பத்திக் கிரயத்தில் 70% மூலக்கிரயம் ஆகும். கொள்வனவு செய்த மூலப்பொருள் பெறுமதி யாது?
1. ரூபா 51,000 2. ரூபா 55,000 3. ரூபா 56,000
4. ரூபா 52,000 5. ரூபா 59,000

16. வரையறுத்த உதயன் பொதுக்கம்பனியின் செயற்பாட்டின் போது கிடைத்த தகவலின் தரவு வருமாறு.
- வருடத்தில் விற்பனை ரூபா 300,000 இவற்றுள் 40% கடன் விற்பனை
- வருமானத்தை உழைப்பதற்கான மொத்த செயற்பாட்டு செலவுகள் ரூபா 90,000 இவற்றுள் பெறுமானத் தேய்வு ரூபா 12,000 அட்டுறு செலவுகள் ரூபா 4,000 ம் உள்ளடங்கும்.
- கம்பனியில் தேய்வு அடையக்கூடிய சொத்து 5 வருடங்களுக்கு முன்பு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதன் பெறுமதி ரூபா 120,000
- வருமானவரி வரிகழிக்கமுன் இலாபத்தில் 40% இவ்வருடம் செலுத்தப்பட்டது.

நடைமுறையாண்டில் தேறிய காசுப்பாய்ச்சலை கணிப்பிடப்படுக.
1. ரூபா 6,000 2. ரூபா 142,000 3. ரூபா 18,000
4. ரூபா 22,000 5. ரூபா 138,000

17. நிதிநிறுவனமொன்றுக்கு உரித்தான கட்டிடங்களின் கிரயம் 2010.04.01 இல் ரூபா 120,000 அத்தினத்தில் பெறுமானத்தேய்வு ஏற்பட்டு கணக்கு மீதி ரூபா 330,000 2010.09.30 இல் இக்கட்டிடம் ரூபா 820,000 க்கு மீள்பதியீடு செய்யப்பட்டது. நேர்கோட்டு முறையில் ஆண்டுக்கு 10% தேய்வு இடப்படும்.
இக்கட்டிடத்தை மீள்பதியீடு செய்தமையால் 2011.03.31 இல் முடிவடைந்த ஆண்டில் உரிமை மூலதனத்தில் ஏற்பட்ட தாக்கம் யாது?
1. ரூபா 29,000 அதிகரிப்பு 2. 10,000 அதிகரிப்பு 3. ரூபா 50,000 குறைவு
4. ரூபா 31,000 குறைவு 5. 91,000 குறைவு

18. நிலையான கிரயம் மாறும் கிரயம் மாறாத போது அலகு ஒன்றின் விற்பனை விலை அதிகரித்தமையால் கீழே காட்டப்பட்ட கூற்றில் தவறானது.
1. சமப்பாட்டுப் புள்ளி அலகு குறைவடைந்துள்ளது.
2. பங்களிப்பு வீதம் அதிகரித்துள்ளது
3. எதிர்பார்த்த இலாபம் அதிகரித்தமை
4. மொத்த பங்களிப்பு அதிகரித்தமை
5. பாதுகாப்பு எல்லை பெறுமதி குறைவடைந்துள்ளது.

- **19ம் 20ம் வினாக்களுக்கு பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி விடையளிக்குக.**

	(ரூபா 000)
செயற்பாட்டால் உருவாகிய காசு அதிகரிப்பு	2240
தொழிற்படு மூலதன அதிகரிப்பு	120
செலுத்திய வட்டி	120
முதலீட்டு நடவடிக்கையால் தேறிய காசு குறைவு	540
நிதியீட்ட நடவடிக்கையால் தேறிய காசு அதிகரிப்பு	500
2009.04.01 இல் காசும் காசுக்கு சமனானவை	900
2012.03.31 இல் காசும் காசுக்குக் சமமானவை	2030

2010.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டில் வருமானக் கூற்றில் கணனி விற்பனை இலாபம் ரூபா 50,000 முதலீட்டு வருமானம் ரூபா 70,000 பெறுமானத்தேய்வு ரூபா 200,000 கடன்வட்டி ரூபா 160,000 வருமானவரி ரூபா 1000,000 என்பவை உள்ளடக்கப்பட்டு இருந்தது.

19. 2010.03.31 இல் வரிக்கு முன் தேறிய இலாபம் தொகை ‘000’ ல்
   1. ரூபா 2,600   2. ரூபா 2,120   3. ரூபா 3,120
   4. ரூபா 3,600   5. 1,500

20. செயற்பாட்டால் ஏற்பட்ட நிகர தேறிய காசு அதிகரிப்பும் செலுத்திய வருமானவரியும் முறையே.
   1. ரூபா 1,170 உம் ரூபா 950 உம்   2. ரூபா 2,120 உம் ரூபா 950 உம்
   3. ரூபா 1,170 உம் ரூபா 1,050 உம்   4. ரூபா 2,120 உம் ரூபா 1,050 உம்
   5. ரூபா 1.090 உம் ரூபா 1,030 உம்

21. முதலீட்டு தீர்மான மதிப்பீட்டின் போது காசுப்பாய்ச்சல் என்பதற்குள் அடங்காத உருப்படிகளுள் சரியானவை / சரியானது
   A. ஆழ்ந்தகிரயம்   B. தொழிற்படு முதல்
   C. பெறுமானத்தேய்வு   D. சொத்துகளின் புத்தக பெறுமதி

   1. A, B, C சரியானவை   2. A, C சரியானவை
   3. A, C, D சரியானவை   4. B, C, D சரியானவை
   5. A, B, C, D சரியானவை

22. KPS வணிக நிறுவனத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பானவை.
   A. உரிமையாளர் சொந்த உபயோகத்திற்கு பற்றி காசு கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.
   B. கடன் விற்பனை வருமானக் கூற்றில் காட்டப்பட்டு இருத்தல்
   C. மின்சாரப் பட்டியலில் கொடுப்பனவு செய்யப்படவில்லை என்பதனால் கணக்கில் காட்டப்படாது விடுபடல்
   மேற்கூறப்பட்ட கூற்றுகளுடன் தொடர்புடைய அல்லது மீறப்பட்ட எண்ணக்கருக்கள்.

	A	B	C
1.	அலகுசார் எண்ணக்கரு மீறப்படுதல்	தேறல் எண்ணக்கரு மீறப்படுதல்	அட்டுறு எண்ணக்கரு மீறப்படுதல்
2.	அலகுசார் எண்ணக்கரு மீறப்படுதல்	தேறல் எண்ணக்கரு பின்பற்றப்படுதல்	காசு எண்ணக்கரு பின்பற்றப்படுதல்
3.	அலகுசார் எண்ணக்கரு பின்பற்றுதல்	இணைதல் எண்ணக்கரு பின்பற்றல்	அட்டுறு எண்ணக்கரு மீறப்படுதல்
4.	அலகுசார் எண்ணக்கரு மீறப்படுதல்	தேறல் எண்ணக்கரு பின்பற்றல்	அலகுசார் எண்ணக்கரு மீறப்படுதல்
5.	அலகுசார் எண்ணக்கரு மீறப்படுதல்	அட்டுறு எண்ணக்கரு	அட்டுறு எண்ணக்கரு மீறப்படுதல்

23. பின்வரும் வரைபடமானது தனி ஒரு உற்பத்தி பொருள் 5,000 அலகுகள் விற்பனை மட்டத்தில் இலாப நட்ட வரைபு பின்வருமாறு தரப்படுகின்றது.



காட்டப்பட்ட வரைபடத்தின்படி நிலையான செலவு
   1. ரூபா 16,000   2. ரூபா 12,0003
   3. ரூபா 60,000   4. ரூபா 48,000
   5. ரூபா 24,000

24. பின்வரும் வரைபடமானது ஊழியர் ஒருவர் வாரம் ஒன்றிற்காக 48 மணித்தியாலங்கள் வேலை செய்ததனால் பெற்ற சம்பளத்தைக் காட்டுகின்றது. இவரின் சம்பளம் வேலை செய்த மணித்தியாலங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வாரமொன்றுக்கான சாதாரண வேலை மணித்தியாலங்கள் 40 ஆக இருப்பின் இவ் ஊழியருக்கான மணித்தியாலமொன்றிற்கு விதிக்கக் கூடிய மேலதிக நேரக் கொடுப்பனவு விகிதம் யாது?



1. ரூபா 435
2. ரூபா 120
3. ரூபா 600
4. ரூபா 1.280
5. ரூபா 160

25. கெலன் கம்பனியானது புதிய இயந்திரமொன்றை வாங்குவதற்கான பிரேரணை ஒன்றினை மதிப்பிடுகிறது. இது தொடர்பாக தரப்பட்டுள்ள தகவல்கள் வருமாறு.

	ரூபா
இயந்திரங்களின் கொள்விலை	160,000
இயந்திரத்தின் நிறுத்தற்கிரயம்	30,000
மூன்றாம் வருட முடிவில் இயந்திரத்தின் எஞ்சிய பெறுமதி	10,000
மூன்றாம் வருட முடிவில் தொழிற்படு மூலதனம் மீளப்பெற முடிதல்	20,000
வருடாந்த விற்பனை வருமான அதிகரிப்பு	112,000
வருடாந்த செயற்பாட்டு கிரயம் அதிகரிப்பு	40,000
இயந்திரத்தின் ஆயுட்கால முடிவு 3 வருடங்கள்	10,000

வருடாந்த 10% கழிவு காரணி வருமாறு

வருடம்	0	1	2	3
10% கழிவு காரணி	1	0.91	0.83	0.75

மூன்றாம் வருடத்தில் காசுப்பாய்ச்சல் பெறுமதி

1. ரூ 78,750 2. ரூ 56,250 3. ரூ 102,000
4. ரூ 112,000 5. ரூ 92,000

- **26ம், 27ம் வினாக்களுக்கு விடையளிக்க பயன்படுத்துக.**

26. வரையறுத்த GM கம்பனி குத்தகை அடிப்படையில் கணனி இயந்திரங்கள் சில கொள்வனவு செய்யப்பட்டது. கணனி இயந்திரங்களின் பெறுமதியில் உடன் காசு ரூபா 85,000 செலுத்தி உடன் குத்தகை கட்டணம் ரூபா 60,000 வீதம் 5 வருடாந்த தவணைகளில் செலுத்தி முடிக்கப்படும். 5 வருடங்களுக்கான குத்தகை வட்டி முறையே ரூபா 8,000, ரூபா 6,500, ரூபா 5,000, ரூபா 3,500, ரூபா 2,000 ஆகும். இத் தொகை வருடாந்த குத்தகை கட்டணம் 60,000 இல் உள்ளடங்கும் குத்தகை கட்டணம் ஆனது ஒவ்வொரு வருடமும் நிதி வருட முடிவில் செலுத்தப்படும்.

கணனி இயந்திரங்களுக்கு கிரயத்தில் 10% தேய்வு இடப்படும் மூன்றாம் ஆண்டு முடிவில் கணனி இயந்திரம், குத்தகை தொடர்பாக ஐந்தொகையில் நடைமுறையல்லா பொறுப்பாக வெளிப்படுத்தப்படும் தொகை யாது?

1. ரூபா 58,000 2. ரூபா 56,500 3. ரூபா 120,000
4. ரூபா 114,500 5. ரூபா 60,000

27. 2ம் ஆண்டு முடிவில் கணனி இயந்திரம், குத்தகை தொடர்பாக வருமானக் கூற்றில் காட்டப்படும் மொத்தத் தொகை.

1. ரூபா 6,500 2. ரூபா 34,000 3. ரூபா 45,000
4. 42,500 5. ரூபா 36,500

The National e-learning Portal for The General Education

28. நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்ட பாரம்பரிய சமப்பாட்டு புள்ளி வரைபடம் பின்வருமாறு.



மேற்படி வரைபடத்தின் படி மொத்த நிலையான கிரயம் பெறுமதி யாது?

1. ரூபா 3,600
2. ரூபா 40,000
3. ரூபா 20,000
4. ரூபா 24,000
5. ரூபா 30,000

29. அமல் கமல் குமார் ஆகியோர் பங்குடமை வியாபாரத்தின் 2010.12.31 இல் நடைமுறைக் கணக்கு பின்வருமாறு தயாரிக்கப்பட்டது.

நடைமுறைக்கணக்கு

	அமல்	கமல்	குமார்		அமல்	கமல்	குமார்
மீதி 2010.1.1ல்			5000	மீதி 2010.1.1	15000	10000	
பற்றுக்கள்	18,000	15,000	10,000	மூலதன வட்டி	20,000	15,000	10,000
பற்றுவட்டி	800	500		சம்பளம்	-	-	30,000
மீதி . செ	31,200	28,500	35,000	விளம்பரம்	-	4,000	-
				இலாபப்பகிர்வு	15,000	15,000	10,000
	50,000	44,000	50,000		50,000	44,000	50,000

பங்குடமையில் உடன்படிக்கையின் படி நிலையான மூலதனம் மீது 10% வட்டி செலவு வைக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டில் பங்காளர் மூலதனத்தில் மாற்றம் ஏற்படவில்லை.

2010.12.31 இல் பங்குடமையின் தேறிய சொத்து பெறுமதி

1. ரூபா 94,700 2. ரூபா 20,000 3. ரூபா 450,000
4. ரூபா 544,700 5. ரூபா 40,000

30. மாதம் ஒன்றுக்கு வாடகைக்கு பெற்றுக் கொண்ட பொறி இயந்திரம் ஒன்றில் 5,000 அலகிற்கு மேலதிகமாக உற்பத்தி செய்யும் ஒவ்வொரு அலகிற்கும் ரூபா 2 கட்டணம் செலுத்தப்படும். இச்செயற்பாட்டு மட்ட மொத்த கிரய நடத்தையினை குறிக்கும் பொருத்தமான வரைபடம்











- **31 முதல் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

31. ஒரு பொருள் P யுடன் தொடர்புபட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. உயர்வு இருப்பு மட்டம் 8,100 அலகுகள் வருடாந்த இருப்பு பேணுதல் செலவு ரூபா 3,600 அலகிற்கான இருப்பு பேணுதல் செலவு ரூபா 2 கட்டளை ஒன்றுக்கான செலவு ரூபா 150 இழிவு பாவனை வாரமொன்றுக்கு 225 அலகுகள் இழிவு கட்டளைக்காலம் 4 வாரங்கள் உயர் கட்டளைக் காலம் 6 வாரங்கள்.
    1. EOQ (சிக்கன கட்டணை தொகை) காண்க…………..
    2. வருடாந்த கேள்வித் தொகை ……………………..

32. 1. மறுகட்டளை இடும் மட்டம் ………………..
    2. வாரமொன்றுக்கான உயர்வான அலகுகள் ……………………..

33. பின்வரும் கிரயங்கள் ஒவ்வொன்றும் கட்டுப்படுத்தக்கூடிய கிரயம் / கட்டுப்படுத்த முடியாத கிரயம் என்பதை இனம் கண்டு அதற்கு நேரே அடையாளம் இடுக.

கிரய உருப்படிகள்	கட்டுப்படுத்தக் கூடிய கிரயம்	கட்டுப்படுத்த முடியாத கிரயம்
1. மூலப்பொருள் அழிவு	…………………	…………………
2. கட்டட வாடகை	…………………	…………………
3. விற்பனை வரிகள்	………………….	…………………
4. மேலதிக நேர கொடுப்பனவு	…………………	………………….

34. தரப்பட்டுள்ள பொருளாதார நிலைமைகளில் கீழ்க்காணும் இரு விலையிடல் முறைகளின் கீழ் பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம் / இறுதி மூலப்பொருள்கள் இருப்பின் பெறுமதி என்பவைகளின் தாக்கம் (அதிகம் அல்லது குறைவு) எனக் குறிப்பிடுக.

விலையிடல் முறை	பொருளாதார நிலைமை	பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம்	இறுதி மூலப்பொருள் இருப்பு பெறுமதி
1. முதல் வந்தது முதல் சென்றது	விலையில் அதிகரிப்பு	……………..	……………
2. நிறையளித்த சராசரி முறை	விலையில் குறைவு	……………..	…………….

35. கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக வருமானமொன்றினைப் புத்தகங்களில் பதிவு செய்வதை இனம் காண்பதற்குரிய இரு நியதிகள் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் அவ்இரு நியதிகளையும் குறிப்பிடுக.
    1. ……
    ………………………………………………………………………………
    2. ……
    ………………………………………………………………………………

36. ஒரு தனித்த பொருள் விற்பனை மட்டம் தொடர்பான அட்டவணை தரப்பட்டுள்ளது

விற்பனை மட்டம்	அலகுக்கான நிலையான கிரயம் (ரூபா)	மொத்தப் பங்களிப்பு (ரூபா)
1. ….. ? ……	16	36,000
2. 2,000	24	…….. ? …….

அட்டவணையில் விடுபட்ட இடத்தில் வரவேண்டிய

1. விற்பனை அலகுகள் …………….   2. பங்களிப்பு …………..

37. 36ம் வினாவின் அட்டவணையில் இருந்து சமப்பாட்டு புள்ளி அலகுகள் காண்க ………..

38. வரையறுக்கப்பட்ட லங்கா சுவீட்ஸ் கம்பனியின் புத்தகங்களில் இருந்து 01.04.2010 இல் பெறப்பட்ட தகவல்கள் வருமாறு.

முன்னுரிமை பங்கு மூலதனம் ரூபா 300,000 (மீட்க முடியாத ஒவ்வொன்றும் 10 ரூபா வீதம் வழங்கப்பட்டது. பங்கு இலாபம் பங்கு ஒன்றுக்கு ரூபா 1 வழங்கப்படல் வேண்டும்)
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் ரூபா 500,000 2011.03.31 முடிவடைந்த நிதி ஆண்டு தொடர்பில் இடைக்காலத்தில் செலுத்தப்பட்ட பங்கு இலாபம் சாதாரண பங்கு ரூபா 30,000 முன்னுரிமை பங்கு ரூபா 18,000
இயக்குனர் சபை முன்னுரிமை பங்கு இலாபத்தை வழங்குவதற்கும் சாதாரண பங்குகளுக்கு இறுதிப் பங்கு இலாபமாக ரூபா 20,000 கொடுப்பதற்கு பிரேரித்தனர். இறுதிப் பங்கு இலாபம் கணக்குகளில் பதிவதற்குரிய நாட்குறிப்பு பதிவு தருக.

………

…………………………………………………………………………………………

39. கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் ஒரு கம்பனியின் சமமான ஆரம்ப முதலீடுகளைக் கொண்ட 3 செயற்திட்டங்கள் தொடர்பானவை

செயற்திட்டம்	தேறிய நிகழ்கால பெறுமதி (NPV) ரூபா	முதலீட்டின் திரும்ப பெறும் காலம் (வருடம்)
A	6572	4 வருடம்
B	- 3250	3 வருடம்
C	3427	3 ½ வருடம்

(அ) கம்பனியினால் முதலீட்டின் மூலம் கிடைக்கப்பெறும் காசுப்பாய்ச்சல் ஆனது முழு ஆயுட்காலத்திற்கும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தாது செயற்திட்டம் ஒன்றை தெரிவு செய்யுமாயின் எச் செயற்திட்டத்தை தெரிவு செய்யப்படும் காரணம்?
(ஆ)ஆயுட்காலம் முழுவதற்குமான காசுப்பாய்ச்சலை மதிப்பீட்டுக்கு உட்படுத்துமாயின் எச்செயற்றிட்டம் சாத்தியமானவை? காரணம்.

40. இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன்படி நிறுவனமொன்றானது கணக்கீட்டுக் கொள்கையை இரண்டு சூழ்நிலைகளில் மாற்றிக் கொள்ள முடியும் அவ் இரண்டு சூழ்நிலைகளையும் குறிப்பிடுக.
1. …………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………………
…………………………………………………………………………………

41. வரையறுத்த அகிலன் கம்பனியின் 2010 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்திற்கான தகவல்கள் வருமாறு.
சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் எண்ணிக்கை 30 வாரத்தில் 45 மணித்தியாலப்படி மாதத்திற்கு 4 வாரம் வேலை செய்ய வேண்டும். எல்லா ஊழியர்களும் ஒழுங்காக வேலைக்குச் சமூகமளித்தனர்.

சாதாரண மணித்தியாலக் கூலி	ரூபா 50
மேலதிக நேரக்கூலி மணித்தியாலத்திற்கு	ரூபா 60
மாதத்தில் வேலை செய்த மணித்தியாலங்கள்	6,000

அடிப்படைச் சம்பளத்தில் 10% ஊழியரும் 15% கம்பனியும் ஊழியர் சேமஇலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்படும். அத்துடன் ஒவ்வொரு ஊழியரிடமும் சம்பள முற்பண தொகை மாதாந்தம் ரூபா 500 கழிக்கப்படும். எல்லாக் கொடுப்பனவும் அடுத்து வரும் மாதத்தில் செலுத்தப்படும்.
1. ஊழியர்கட்கான மேலதிக நேர கொடுப்பனவு தொகை யாது?..
2. கம்பனியினால் ஊழியர்கட்கு அடுத்தமாதம் வழங்கப்பட வேண்டிய தேறிய சம்பளத் தொகை யாது?..

42. நிறுவனம் ஒன்றில் 2006.04.01ல் கொள்வனவு செய்து பயன்படுத்தப்பட்ட காணிக்கட்டிடம் தொடர்பான தகவல்கள் வருமாறு.
2010.04.01 ஆம் திகதியில் காணிக்கட்டிடம் கிரயமும் கட்டிட பெறுமானத் தேய்வு ஏற்பாடும் முறையே ரூ. 1200,000 ரூ. 120,000 ஆக இருந்தது. கட்டிடங்களுக்கு வருடாந்தம் 6 வீதம் நேர்கோட்டு முறையில் தேய்வு இடப்படுதல் கொள்கையாகும். 2010.09.30 இல் முகாமையினால் காணியினையும் கட்டிடத்தினையும் மீள்மதிப்பீடு செய்தனர்.
காணி ரூபா 850,000 கட்டிடம் ரூபா 400,000
இக்காணி கட்டிடம் தொடர்பாக 2011.03.31 நிதிக்கூற்றின் படி
1. கட்டிடங்களின் வருடாந்தப் பெறுமானத் தேய்வு? ……………………
2. உரிமை மூலதனத்தில் ஏற்பட்ட தாக்கம் யாது? ……………………

43. சோபா லிமிட்டெட் நிறுவனத்தில் நடைமுறை விகிதம் மூன்று ஆண்டுகளாக அதிகரித்த போதும் திரவ விகிதம் கடன்பட்டோர் புரள்வு விகிதம் என்பவை தொடர்ச்சியாக குறைவடைந்துள்ளது.

1. கடன்பட்டோர் புரள்வு விகிதம் குறைவதற்கான காரணம் ஒன்று குறிப்பிடுக.
……………………………………………………………………………………

2. கடன்பட்டோர் புரள்வு விகிதத்தை கணிப்பதற்குரிய விகிதம் ஒன்று (சமன்பாடு)
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………

44. பின்வரும் கொடுப்பனவுகள் பெறுவனவுகள் கணக்கீட்டு நியமம் 9 இற்கு அமைய எத்தகைய செயற்பாட்டு நடவடிக்கை என அறிந்து அதற்கெதிரே அடையாளம் இடுக.

கொடுப்பனவு பெறுவனவுகள்	செயற்பாட்டு நடவடிக்கை	முதலீட்டு செயற்பாட்டு நடவடிக்கை	நிதியீட்ட செயற்பாடு நடவடிக்கை
1.EPE செலவு கொடுப்பனவு			
2. ஊழியருக்கு வழங்கிய கடன்			
3. செலுத்திய பங்கு இலாபம்			
4. பெற்ற பங்கு இலாபம்			

45. வரையறுக்கப்பட்ட பிரியா கம்பனி வரையறுக்கப்பட்ட சாந்தி கம்பனிக்கு குத்தகை ஆதனம் தொடர்பான இறுதி தவணைக் கட்டணம் ரூபா 90,000 (வட்டி ரூபா 15,000 உட்பட) செலுத்திய தொகை வரையறுக்கப்பட்ட சாந்தி கம்பனி கணக்கிலும் காசேட்டிலும் செலவில் பதியப்பட்டிருந்தது தவிர வேறு எப்பதிவும் பதியப்பட்டிருக்கவில்லை இத்தவறை திருத்துவதற்கான பொது நாட்குறிப்பு பதிவு
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
…………………………………………………………………

46. கணக்கீட்டு நியமம் 36 ஏற்ப ரூபா 120,000 க்கான ஊழியர் நட்டஈடு ஏற்பாடு 2009.04.01 இல் பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2010.03.31 ல் முடிவடையும் ஆண்டில் தீர்மானிக்கப்பட்ட வழக்கிற்கமைய செலுத்த வேண்டிய நட்ட ஈட்டுத் தொகை ரூபா 100,000 என தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2010.03.31 இல் முடிவடைந்த ஆண்டு தொடர்பில் நிதிக்கூற்றில் ஏற்படுத்தும் தாக்கத்தினை குறிப்பிடுக?
……………………………………………………………………………………………

47. தார்மா கம்பனி தனது உற்பத்தி தொடர்பான மீள் குறியீடு பெயருடைய பொருளொன்றினை சந்தையில் அறிமுகம் செய்தது. இது தொடர்பாக பின்வரும் செலவுகள் கருதப்பட்டன. இயக்குனர்கள் இச் செலவுகள் முழுவதையும் மூலதனமாக்க விரும்புகின்றனர். இச்செலவுகள் மூலதனமாக்க முடியுமாயின் (ஆம்) எனவும் முடியாதாயின் (இல்லை) எனவும் அதற்கு நேரே எழுதுக.

1. ஊடக மேம்படுத்தல் செலவு …………………..
2. சந்தை ஆய்வுச் செலவு ……………………….
3. விளம்பர முகவர் நிறுவனக் கட்டணம் …………………..
4. புதிய குறியீட்டு அபிவிருத்திச் செலவுகள் ………………..

48. LKAS 10 இன் படி ஐந்தொகைக்கு பின்னர் நிகளும் நிகழ்வுகள் இரண்டு வகைப்படும்
அ) அவ் நிகழ்வுகள் இரண்டு நிகளும் எவை?
1. ……………………………………………………………………………………..
2. ……………………………………………………………………………………..

49. ஒரு தனித்த பொருளின் உற்பத்தி விற்பனையில் ஈடுபடும் நிறுவனத்தின் அலகுக்கான மொத்தக் கிரயம் காட்டும் வரைபடம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.



வேண்டப்படுவது
விற்பனை மட்ட 5,000 அலகுக்கான
1. நிலையான கிரயம் …………………………. 2. மாறும் கிரயம் …………………..

50. வரையறுத்த மதுமதி பொதுக்கம்பனியில் உள்ள கணினி அமைப்புக்கு பதிலாக கணினி அமைப்பினை தயாரிப்பதற்கு எதிர்பார்த்தனர். எதிர்பார்த்த காசுப்பாய்ச்சல் வருமாறு

வருடம்	நிகர காசுப்பாய்ச்சல் (ரூபா)
1	120,000
2	160,000
3	180,000
4	200,000
5	140,000

இழிவப் பெறுமதி ரூபா 15,000 முதலீட்டுக் கிரயம் 10% முதலீட்டின் திரும்பல்காலம் மூன்று வருடமும் ஒன்பது மாதமும் ஆகும். முதலீட்டின் ஆரம்பக்கிரயத்தினை காண்க?
……………………………………………………………………………………………………

கணக்கீடு **வினாத்தாள் I** **விடைகள்**

1 - 5	11 - 1	21 - 3
2 - 2	12 - 2	22 - 4
3 - 1	13 - 3	23 - 1
4 - 2	14 - 1	24 - 5
5 - 3	15 - 5	25 - 3
6 - 3	16 - 4	26 - 1
7 - 1	17 - 1	27 - 4
8 - 3	18 - 5	28 - 1
9 - 2	19 - 2	29 - 5
10 - 5	20 - 1	30 - 5

31. 3600 அலகுகள், 86400 அலகுகள்

32. 5400 அலகுகள், 900 அலகுகள்

33.

1	√	
2	√	√
3	√	√
4	√	

34. குறையும் அதிகரிக்கும்
குறையும் குறையும்

35. எதிர்கால பொருளாதார பயன் நிச்சயமாக உட்பாய்தல்
நம்பகமாக மதிப்பிடக்கூடியதாக இருத்தல்

36. 1. 3000 அலகுகள்
2. 24000/=

37. 4000/=

38. இலாப நட்டப் பகிர்வுக் கணக்கு வரவு 12000
செலுத்தவேண்டிய பங்கு இலாப கணக்கு செலவு 12000

39. B முடிவின் திரும்ப பெறும் காலம் குறைவாக இருத்தல்

40. கணக்கீட்டு நியமம் ஒன்றினால் தேவைப்படும்போது மாற்றமானது முன்னரை விட நம்பகரமான தகவலை வழங்கும் எனக் கருதினால்

41. ரூ. 36,000
ரூ. 264,000

42. 27,000/=
18,800ஆல் உரிமை அதிகரிக்கும்

43. 1. இருப்பு பெறுமதி அதிகரித்துக் காணப்படும்
2. $\frac{\text{கடன் விற்பனை}}{\text{சராசரி கடன்பட்டோர்}}$ or $\frac{365}{\text{கடன் வசூலிக்கும் காலம்}}$

44. 1. செயற்பாட்டு நடவடிக்கை 2. முதலீடு
3. நிதியீட்ட நடவடிக்கை 4. முதலீட்டு செயற்பாடு

45. குத்தகை வட்டி வரவு 15,000
குத்தகை கம்பனி கணக்கு வரவு 165,000
தொங்கல் கணக்கு செலவு 180,000

46. வருமானம் 2,000

47. இல்லை
இல்லை

இல்லை
ஆம்

48. 1. சீராக்கக்கூடிய நிகழ்வு
2. சீராக்க முடியாத நிகழ்வு
3. நிகழ்வின் தன்மை
4. நிதித்தாக்கம்

49. 1. 24,000/=
2. 13/=

50. 150,000/=
610,000/=